[1984 மார்ச் 13

இராயப்பேட்டை மருத்துவ மனையிலுள்ள இருதய சிகிச்சைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும் திட்டம்

298—(*வினா எண் 20612) திரு. செ. சிவசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இராயப்பேட்டை மருத்துவ மனையின் இருதய நோயாளிகள் பிரிவை மேலும் அபிவிருத்தி செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீர்.

299—(*வினா எண் 21575) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவுநீர் வெளியேறித் துர்நாற்றம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அருகாமையில் உள்ள நிலங்களில் இந்நீர் பாய்வதால் நிலம் களர் நிலமாக மாறுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநாகேசுவரம் நவீன அரிசி ஆலையின் கழிவு நீர் பாய்ந்து அருகாமையில் இருக்கிற சன்னாபுரம், ஆண்டலான் பேட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களையெல்லாம் களர் நிலங்களாக மாற்றி, தற்போது விவசாயத்திற்கே லாயக்கில்லை என்று அவை சொல்லப்படுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக அந்த ஆலைக்குள்ளேயே செப்டிங் டாங்க் கட்டி, அந்தக் கழிவு நீரை வெளியே வராமல் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவு நீரால் விவசாயம் பாதிகப்பட்டதாக என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. கழிவு நீரால் துர்நாற்றம் வீசப்படுதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றும்படி தொழிற்சாலயை வாரியம் வற்புறுத்தி உள்ளது.